**யட்டிநுவர பிரதேச சபை - 2024**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

யட்டிநுவர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யட்டிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 126,164 கூட்டுத்தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 318,455 கூட்டுத் தொகையான இயந்திர உபகரணங்கள் மற்றும் சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 05 ரூபா 1,617,473 கூட்டுப்பெறுமதியான காணித் துண்டுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ரூபா 252,520 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணினி இயந்திரம் ரூபா 25,252 என ரூபா 227,268 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | தந்துறை சந்தை இடத்திற்காக 2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2025 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு பெற்றுக் கொண்ட காணிக்காக மீளாய்வாண்டு செலுத்தப்பட்ட ரூபா 275,860 ஆன குத்தகை வாடகை மீளாய்வாண்டின் செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | – மேற்படி -- | செலவினங்கள் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 ஆம் ஆண்டு முதல் மீளாயவாண்டு வரை சபை நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 76 செயற் திட்டங்களுக்கு கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் திட்டங்களுக்கு உரிய ரூபா 3,483,986 கூட்டுதொகை கடன் கொடுத்தோரின் கீழ் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கொடுப்பனவு முறைப்படி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாவாண்டின் இறுதி திகதிகள் உள்ளவாறு காணப்பட்ட நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் 02 சொத்து விடயங்களின் மீதிகள் அதற்குரிய அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 96,096 ஆன இணக்கமிண்மை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி கணினி நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் ரூபா 8,539,423 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுகளில் ரூபா 7,782,452 என காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 756,971 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | நீண்ட காலமாக இருந்து வரும் வேறுபாட்டை பரீசிப்பது சிரமமாக இருப்பதாகவும் பரீட்சித்து மீதி சரியானது என மற்றும் எதிர்காலத்தில் விலகல் ஒன்று இல்லாமல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்து மூலம் சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 16,545,720 ஆன 04 சொத்து விடயங்கள் மற்றும பொறுப்பு விடயமொன்றுக்குரிய கோவைகள் மற்றும் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் இனங்காணப்பட்டு பதிவேடுகள் அட்டவணைகள் சரிசெய்யப்படும் என்பதாக. | ஒவ்வொரு கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய பதிவேடுகள் கோவைகள் மற்றும் அட்டவணைகள் பேணிச்செல்லப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| **(i)** | 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை VI ஆம் பகுதியின் 83.1 ஆம் பிரிவு | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 486 கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்படாதிருந்ததுடன் அந்நிர்மாணங்களைப் பரீட்சித்து வீதவரியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் காலங்களில் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதாக. | கட்டிடங்களை பரீட்சித்து இணக்க சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 47, 49 (ஆ) மற்றும் 52** | 2022 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை காணப்பட்ட 239 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணங்கள் தொடர்பாக தேடி ஆராய்ந்து எதிர் காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி 571(3) | 2015 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான காலப் பகுதிக்கரிய காலாவதியான ரூபா 3,586,460 பெறுமதியான காலாவதியான 1,073 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சீராக்கம் செய்தல் மேற்கொள்ளப்பட்டுள் ளதுடன் மிகை மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | **1988 மே 17 ஆந் திகதிய** 1988/ 22**ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | வீதவரி அறவீட்டிற்காக சபை அதிகார பிரதேசத்தில் அனைத்து அசையாத ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபை 2018 ஆம் ஆண்டில் மேற் கொண்ட மதிப்பீட்டை செயல்படுத்துதல் 2024 வரை தாமதிக்கப் பட்டிருந்ததுடன் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு 7 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் 2025 ஆம் ஆண்டிற்காகவும் 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டை அடிப்படை யாகக் கொண்டு சபையால் வீத வரி விடப்பட்டிருந்தது. | 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் மதிப்பீட்டை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஐந்து ஆண்டு களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரி அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 94,337,117 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 97,582,139 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 17,836,560 | 16,965,543 | 13,487,278 | 7,127,056 | 3,468,000 | 3,711,599 | 4,801,001 | 3,648,791 |
| (ii) | வாடகை | 1,630,000 | 1,591,950 | 1,886,675 | 1,105,480 | 1,500,000 | 1,163,355 | 548,580 | 1,400,205 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,251,360 | 2,781,617 | 2,733,037 | 102,580 | 5,405,000 | 4,225,144 | 4,225,144 | 54,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 110,511,000 | 113,339,884 | 181,058,626 | 80,611,858 | 76,500,000 | 65,629,145 | 19,232,229 | 148,330,600 |
| | | 133,228,920 | 134,678,994 | 199,165,616 | 88,946,974 | 86,873,000 | 74,729,243 | 28,806,954 | 153,433,596 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 6,516,863 ஆக இருந்தது. அந்நிலுவையில் ஒரு அலகு நிலுவை ரூபா 10, 000இற்கு மேற்பட்ட காணப்படும் 41 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 1,037,378 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வீதவரி வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதி உள்ளவாறு சபைக்கு சொந்தமான 05 கடைகளில் இருந்து 2006 முதல் 2024 ஆம் வரையான காலப்பகுதியில் இருந்து ரூபா 1,107,405 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது இந்த பெறமதிகளை சீராக்குவதற்கும் நிலுவையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை மீதிகள் சரி செய்யப்பட்டு விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,053,740 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 75,323,986 ஆக இருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கட்டிட திட்டங்கள் அங்கீகரிக்கும் குழு படியாக ரூபா 730,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் திட்ட குழுவிற்கு சமூகமளித்த | எதிர்காலத்தில் வெளியேறும் நேரத்தை கைவிரல் அடையாளம் இயந்திரத்தில் குறிப்பிடுவது | கைவிரல் அடையாள இயந்திரத்தில் வெளியேறுகையை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் கைவிரல் அடையாள இயந்திரத்தில் வெளியேறலை பதிவு செய்யப்படாமை காரணமாக அது கடமை நேரத்தில் இடம்பெற்றுள்ளது என்பதை புறக்கணிக்க முடியாதது. | இடம்பெறும் என்பதாக குறிப்புகள் இடம். | வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான ஆண்டு வரை 12 நிர்மாணங்களுக்காக கடன் கொடுத்தோருக்கு செலுத்திய பெறுமதியை விட குறைத்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 288,697 தொயையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அனைத்து பணமும் அளவிடப்பட வேண்டும். |
| (இ) | 1987 செப்டம்பர் 30 ஆம் திகதிய 05/1/ 119 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின்் திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலீட்டு கணக்கில் உள்ள பணத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விசாரித்து பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்த முடியுமான போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்தம் ரூபா .9,468,919 ஆன மீதியில் எவ்வித தொகையும் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இப்பணத்தையும் சபை நிதியத்தையும் பயன்படுத்தி பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்வபதாக. | குறித்த நிதியத்தை செயற்திறனாக பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமாக காணப்படும் 06 நீர் முன்மொழிவு முறைமைகளின் நீர் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நீரின் தரம் குறைந்து காணப்பட்ட போதும் அந்நீர் சுத்திகரிக்கப்படாமல் செயற்திட்டத்தின் மூலம் குடிநீர் பகுந்தளிக்கப்பட்டிருந்தது. | நீர் மூலாதாரங்களை மிகவும் நல்ல நிலைமையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 2025 இல் அதன் தரம் பரீட்சிக்கப்பட்டாகவும். | குடிநீர் சுத்சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுகளில் காண்பிக்கப்படும் 2019 முதல் 2022 வகையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,944,849 ஆன 11 கடன் கொடுத்தோர் மதிகள் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை வெவ்வேறு கடன் கொடுத்தோராக காணப்படும் ரூபா 1,463,509 தொகை உரிய கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகையாக இருந்ததுடன் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக பரீசித்து அறிக்கையை உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கும் அதன் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும். | கணக்கு சீராக்கம் செய்யப்பட்டு கடன் கொடுத்தோர் மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | கொடுப்பனவு செய்வதற்கு இல்லாத எரிபொருள் படிகளின் மொத்தம் ரூபா | அம்மீதிகள் தொடர்பாக அறிக்கை ஒன்றை | கடன் கொடுத்தோர் மீதிகள் சீராக்கம் |

| | | |
|---|---|---|
| 822,300 ஆன மீதி ஒன்று கடன் கொடுத்தோரின் கீழ் தவறுதலாக தொடர்ந்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்துக்கு அனுப்புவதற்கும் அத்தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | செய்யப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 952,500 கூட்டுத் தொகையான 08 வாகனங்கள் 02 இற்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக பயன்படுத்தாமல் விளைவற்று அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. 2020 ஜுலை 21 மற்றும் 2022 ஜுலை 19 ஆம் திகதிகளில் பொதுச்சபை கூட்டங்களில் அவ்வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையிலும் தீர்மானங்கள் செயல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | .ஏல விற்பனை செய்வதற்கு முன்னர் வாகனங்களின் செயற்பாடு மற்றும் மதிப்பீட்டு செய்வதற்கு தேவையாக அறிக்கை உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதும் இதுவரை அவ்வறிக்கை கிடைக்காததனன் காரணமாக ஏலவிற்பனை நடவடிக்கைகள் தாமதிக்கப்பட்டுள்ளதாக . | கைதவிர்ப்பு செய்றபாடு செயல்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்துகின்ற 31 காணித் துண்டுகளின் உரித்து கையேற்கப் பட்டிருக்கவில்லை. | ஆதனங்களில் உரித்து உறுதிப்படுத்திய அதன் பின்னர் உறுதிப்படுத்தியதன் பின்னர் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காணிகளின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 10 பதவிகளில் 18 வெற்றிடங்களும் பதவியொன்றில் 28 மிகைகளும் காணப்பட்டன. | அரசின் ஆட்சேர்ப்பு கொள்கையின் பேரில் ஆட்சேர்ப்பு தாமதிக்கப் பட்டுள்ளதாகவும் வெற்றிடமான பதவிகள் மற்றும் பதவியணியினர் மீளாய்வினை | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**சுற்றாடல் பிரச்சினைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கிரிமெட்டியதன்ன கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் உக்காத கழிவுகளை திறந்த வெளியில் எரித்தமை காரணமாக அதிலிருந்து வெளியேறும் புகை பொதுமக்கள் மற்றும் சுற்றாடலுக்கு பாதகமான வகையில் தாக்கம் அளித்திருந்தது. | உரிய வகையில் அழிப்பதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | சுற்றாடலுக்கு சாதகமான வகையில் கழிவு பொருட்கள் முகாமைத்திரம் செய்யப்பட வேண்டும். |